# ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களின் அளவைக் குறைப்பதற்கான வழிகாட்டி

## ரொறன்ரோவிலுள்ள உணவுச் சேவை வணிகங்களின் தயாரிப்புக்களுக்கான மாற்றீடுகள் பற்றிய வழிகாட்டி

ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களிலிருந்து உருவாகும் கழிவுகள் மற்றும் குப்பைகூழங்களைக் குடியிருப்பாளர்களும் வணிகங்களும் குறைப்பதற்கு உதவுவதில் ரொறன்ரோ நகர் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது. ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களைக் குறைத்தல் நகரின் நீண்ட காலத்துக்கான கழிவு மேலாண்மை உத்தி (Long Term Waste Management Strategy) மற்றும் கழிவு எதுவுமற்ற எதிர்காலம் மற்றும் சுழற்சிப் பொருளாதாரத்துக்கான லட்சிய இலக்குகளுக்கு உதவிசெய்கிறது.

ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களைக் குறைக்கும் நகரின் உத்தியானது பிளாஸ்ரிக்கினால் மட்டுமின்றி அனைத்து வகையான பொருட்களிலிருந்தும் தயாரிக்கப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டுக்கும் உதவிக்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களைக் (accessory items) குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், அவற்றைச் சேகரித்து அப்புறப்படுத்துவதற்கும் பெறுமதியான வளங்களும் சக்தியும் தேவைப்படுகின்றன. இந்தப் பொருட்கள் பெரும்பாலும் நிலக்கிடங்குகளில் (landfill) போய்ச்சேருகின்றன அல்லது குப்பைகூழங்களாக எறியப்படுகின்றன, அது சுற்றுச்சூழலுக்கும் விலங்குகளுக்கும் ஆபத்துகளை ஏற்படுத்தக்கூடும்.

ஒற்றைப் பயன்பாட்டுக்கும் எடுத்துச்செல்வதற்கும் (Takeaway) பயன்படுத்தப்படும் பொருள்கள் தொடர்பான நகரின் 2018, 2019 மற்றும் 2022 பொதுக் கலந்தாலோசனைகளின்போது கழிவுக் குறைப்புத் தொடர்பாகக் கிடைத்திருந்த பின்னூட்டங்களுக்கும் ஆதரவுகளுக்கும் இன்றுவரையான மற்றும் தொடர்ச்சியான கழிவுக் குறைப்பு முயற்சிகளுக்கும் ரொறன்ரோவின் குடியிருப்பாளர்களுக்கும் வணிகங்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். ஒன்றாகச் சேர்ந்து, நிலக்கிடங்குகளில் (landfill) அதிக கழிவுகள் சேராமல் தடுப்பதுடன், சுற்றுச்சூழலுக்கும் நாங்கள் நன்மை செய்யலாம்.



TORONTO

311 toronto at your service

Live green Toronto

## குவளைகள் (CUPS)
குளிர் பானங்கள்| சூடான பானங்கள்

## கொள்கலன்கள்
தயாரிக்கப்பட்ட சூடான மற்றும்/அல்லது ஈரமான உணவு | தயாரிக்கப்பட்ட உலர் உணவு

## உதவிக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் (ACCESSORY ITEMS)
சிறிய உபகரணங்கள் (Utensils) | பிற

---

# சிறந்தது

### குவளைகள் — மீளப் பயன்படுத்தக்கூடியவை

- வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப் பயன்படுத்தக்கூடிய குவளைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்
- வந்திருந்து உணவருந்துவோருக்கு மீளப்பயன்படுத்தக்கூடிய குவளைகளை வழங்குங்கள்
- ரொறன்ரோ பொதுச் சுகாதாரத் தரங்களின்படி மீளவும் மீளவும் சுத்தம் செய்வதைத் தாங்கக்கூடிய, நீடித்த பாவனைக்குரிய மீளப்பயன்படுத்தக்கூடிய குவளைகளைத் தெரிவுசெய்யுங்கள்
- வைப்புப் பணத்தை மீளச் செலுத்தும் (deposit-return) அல்லது குவளைகளைப் பகிரும் திட்டத்தைக் கருத்திலெடுங்கள்
- பயன்பாட்டின் முடிவில் மீள்சுழற்சி செய்யக்கூடிய, நீடித்த பாவனைக்குரிய மீளப்பயன்படுத்தக்கூடிய குவளைகளைத் தெரிவுசெய்யுங்கள்



### கொள்கலன்கள் — மீளப் பயன்படுத்தக்கூடியவை

- வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப்பயன்படுத்தக்கூடிய குவளைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்
- வந்திருந்து உணவருந்துவோருக்கு மீளப்பயன்படுத்தக்கூடிய சேவைக்குரிய பொருள்களை (serviceware) வழங்குங்கள்
- கொள்கலன் பகிர்வுத் திட்டத்தில் உறுப்பினராகுவதைக் கருத்திலெடுங்கள் அல்லது உங்களின் சொந்த இலச்சனையுடனான (branded) மீளப்பயன்படுத்தக்கூடிய கொள்கலன்களை வாங்கும் தெரிவை வழங்குங்கள்
- ரொறன்ரோப் பொதுச் சுகாதாரத் தரங்களின்படி மீளவும் மீளவும் சுத்தம் செய்வதைத் தாங்கக்கூடிய, நீடித்த பாவனைக்குரிய மீளப் பயன்படுத்தக்கூடிய கொள்கலன்களைத் தெரிவுசெய்யுங்கள்
- பயன்பாட்டின் முடிவில் மீள்சுழற்சி செய்யக்கூடிய, நீடித்த பாவனைக்குரிய மீளப்பயன்படுத்தக்கூடிய கொள்கலன்களைத் தெரிவுசெய்யுங்கள்



### உதவிக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் — மீளப் பயன்படுத்தக்கூடியவை

- கோரிக்கையின் பேரில் மட்டுமே வழங்குங்கள்
- வந்திருந்து உணவருந்துவோருக்கு chopsticks உள்ளடங்கலான மீளப்பயன்படுத்தக்கூடிய உபகரணங்களை வழங்குங்கள்
- மீளப்பயன்படுத்தக்கூடிய குவளைகள் அல்லது வழங்கும் கருவிகளில் (dispensers) ketchup மற்றும் mustard போன்ற சுவையூட்டிகளைப் பரிமாறுங்கள்



# நல்லது

### குவளைகள் — மீளாக்கம் செய்யக்கூடியவை

- அதிக அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் (HDPE), பொலிஎதிலீன் ரெரப்த்தலேற் (PET) மற்றும் பொலிபுரோப்பிலீன் (PP) அல்லது காகித நார்களால் ஆன, ஏனைய பொருள்களால் மேல் பூச்சுப் பூசப்படாத அல்லது தடிப்பாக்கப்படாத, ஒற்றை பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்ட குவளைகளைத் தெரிந்தெடுங்கள்.
- மீள்சுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்ரிக் மூடிகளைத் தெரிந்தெடுங்கள்
- மீள்சுழற்சி செய்யக்கூடிய காகிதத்தால் செய்யப்பட்ட cup sleeveகளைத் (குவளையின் சூடு தெரியாமல் பிடிப்பதற்கு உதவுபவை) தெரிந்தெடுங்கள்
- அவர்களின் மீள்சுழற்சித் திட்டத்தில் அல்லது சேதனத் திட்டத்தில் ஏதாவது மாற்று வழிகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்பதை உறுதிசெய்வதற்கு உங்களின் கழிவுச் சேகரிப்புச் சேவை வழங்குநருடன் தொடர்புகொள்ளுங்கள்




### கொள்கலன்கள் — மீளாக்கம் செய்யக்கூடியவை

- அலுமினியக் கொள்கலன்கள் மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய மூடிகளைத் தெரிந்தெடுங்கள்
- அதிக அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் (HDPE), பொலிஎதிலீன் ரெரப்த்தலேற் (PET) மற்றும் பொலிபுரோப்பிலீன் (PP) அல்லது காகித நார்களால் ஆன, ஏனைய பொருள்களால் மேல் பூச்சுப் பூசப்படாத அல்லது தடிப்பாக்கப்படாத, ஒற்றை பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்ட [பொருள்களைத் தெரிந்தெடுங்கள்.
- அவர்களின் மீள்சுழற்சித் திட்டத்தில் அல்லது சேதனத் திட்டத்தில் ஏதாவது மாற்று வழிகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதை உறுதிசெய்வதற்கு உங்களின் கழிவுச் சேகரிப்புச் சேவை வழங்குநருடன் தொடர்புகொள்ளுங்கள்



### உதவிக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் — மீளாக்கம் செய்யக்கூடியவை

- கோரிக்கையின் பேரில் மட்டுமே வழங்குங்கள்
- பிளாஸ்ரிக் போன்ற ஏனைய பொருள்களால் தடிப்பாக்கப்படாத, ஒற்றைக் காகித strawகளைப் பயன்படுத்துங்கள்
- அவர்களின் மீள்சுழற்சித் திட்டத்தில் ஏதாவது மாற்று வழிகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதை உறுதிசெய்வதற்கு உங்களின் கழிவுச் சேகரிப்புச் சேவை வழங்குநருடன் தொடர்புகொள்ளுங்கள்



# தவிருங்கள்

### குவளைகள் — பிரச்சினைக்குரிய பொருள்கள்

- உக்கலாக மாறக்கூடியவை (compostable) அல்லது பிரிந்தழியக்கூடியவை (biodegradable)
- எனப் பெயரிடப்பட்டிருக்கும் குவளைகள் மற்றும் மூடிகளைத் தவிருங்கள்






### கொள்கலன்கள் — பிரச்சினைக்குரிய பொருள்கள்

- உக்கலாக மாறக்கூடியவை அல்லது பிரிந்தழியக்கூடியவை எனப் பெயரிடப்பட்டிருக்கும் கொள்கலன்கள் மற்றும் மூடிகளைத் தவிருங்கள்
- Foam மற்றும் கறுப்புநிறப் பிளாஸ்ரிக் கொள்கலன்களைத் தவிருங்கள்



### உதவிக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் — பிரச்சினைக்குரிய பொருள்கள்

- ஒற்றைப் பயன்பாட்டுக்கான பிளாஸ்ரிக் உபகரணங்களைத் (எந்த நிறமானாலும்) தவிருங்கள்
- உக்கலாக மாறக்கூடியவை அல்லது பிரிந்தழியக்கூடியவை எனப் பெயரிடப்பட்டிருக்கும் சாப்பிட உதவும் உபகரணங்கள் மற்றும் மூடிகளைத் தவிருங்கள்
- Napkins போன்ற பொருள்களுடன் முன்பொதி செய்யப்பட்டிருக்கும் ஒற்றைப் பயன்பாட்டுக்கான உபகரணங்களைத் தவிருங்கள்



---

ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்ரிக் தடை தொடர்பான மத்திய அரசின் விதிகள் பின்வரும் பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது

- டிசம்பர் 20, 2022 முதல் பொருள்கள் வாங்கும் பைகள், உணவுண்ணப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உணவுச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், stir sticks (கலக்கப் பயன்படுத்தப்படுவன) மற்றும் straws
- ஜூன் 20, 2023 முதல் ring carriers (குழந்தைகளைக் காவப் பயன்படுத்தப்படுபவை)
- ஜூன் 20, 2024 முதல் பானக் கொள்கலன்களுடன் பொதிசெய்யப்படும் flexible straws

# தரவுகளின் சுருக்கம் ஆதாரவளங்கள்

- **மிகக் குறைந்த கழிவுக்கான தெரிவாக மீளப்பயன்படுத்தக்கூடிய பொருள்கள் உள்ளன.**
- **பிளாஸ்ரிக் அல்லது மெழுகு பூசப்பட்ட காகிதத் தயாரிப்புகளை நகரின் பச்சைத் தொட்டிச் (Green Bin) சேதனப்பொருள் திட்டத்தில் உக்கலாக மாற்றவோ அல்லது நகரரின் நீலத் தொட்டி (Blue Bin) மீள்சுழற்சித் திட்டத்தில் மீள்சுழற்சி செய்யவோ முடியாது. உங்களின் கழிவு சேகரிப்புச் சேவை வழங்குநர் வேறுவிதமாக அறிவுறுத்தினாலேயன்றி, இந்தத் தயாரிப்புகள் குப்பையாகத்தான் அகற்றப்பட வேண்டும்.**
- **உணவு அல்லது பானங்களின் மீதியால் ஈரமாகியிருந்தாலும், காகித நார்களாலான அனேகமான தயாரிப்புகளை நகரின் பச்சைத் தொட்டிச் சேதனத் திட்டத்தில் சேர்க்கக்கூடியதாக இருக்கும்.**
- **குவளைகள், கொள்கலன்கள் மற்றும் உணவுண்ண உதவும் உபகரணங்கள் போன்ற உக்கலாக மாறக்கூடிய அல்லது பிரிந்தழியக்கூடிய பிளாஸ்ரிக் பொருள்களை நகரின் பச்சைத் தொட்டிச் சேதனப்பொருள் திட்டத்திலோ அல்லது நகரரின் நீலத் தொட்டி மீள்சுழற்சித் திட்டத்திலோ சேர்க்கமுடியாது. உங்களின் கழிவு சேகரிப்புச் சேவை வழங்குநர் வேறுவிதமாக அறிவுறுத்தினாலேயன்றி, இந்தத் தயாரிப்புகள் குப்பையாகத்தான் அகற்றப்பட வேண்டும்.**

நகரின் நீலத் தொட்டி மீள்சுழற்சித் திட்டத்திலோ அல்லது நகரின் பச்சைத் தொட்டிச் சேதனப்பொருள் திட்டத்திலோ ஏதாவது மாற்றுப் பொருள்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா என்பதை ரொறன்ரோ வாடிக்கையாளர்கள் கண்டறிவதற்கு toronto.ca/wastewizard இல் அல்லது TOwaste பயன்பாடு ஊடாக Waste Wizardஐப் பயன்படுத்தமுடியும்.

நகரின் பச்சைத் தொட்டிச் சேதனப்பொருள் திட்டத்தில் அல்லது நகரின் நீலத் தொட்டித் திட்டங்களில் வாடிக்கையாளர்கள் உக்கலாக மாறக்கூடிய அல்லது பிரிந்தழியக்கூடிய பொருள்கள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது பற்றி toronto.ca/single-use இல் மேலும் அறியுங்கள்.

ReduceWasteTO ஒற்றைப் பயன்பாட்டைக் குறைத்தல் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் ஆதாரவளங்களுக்குப் பார்வையிடுங்கள் toronto.ca/reducingsingleuseprogram.

வழிகாட்டல் ஆவணங்கள் உள்ளடங்கலான, ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்ரிக் தடை தொடர்பான மத்திய அரசின் விதிகள் பற்றிய மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுங்கள் https://www.canada.ca/en/environment-climate-change/services/managing-reducing-waste/reduce-plastic-waste/single-use-plastic-overview.html

**பொறுப்புத் துறப்பு:** உணவுப் பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய தகவல்களை வழங்குவதோ அல்லது பொருந்தக்கூடிய உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் தேவைகள் குறித்த சட்ட ஆலோசனைகளை வழங்குவதோ இந்த வழிகாட்டியின் நோக்கமல்ல. உணவை உற்பத்தி செய்யும், பதப்படுத்தும், தயாரிக்கும், சேமிக்கும், கையாளும், காட்சிப்படுத்தும், விநியோகம் செய்யும், இடம்மாற்றும், விற்பனை செய்யும் அல்லது விற்பனைக்கு வழங்கும் அனைத்து வளாகங்களும் ஆரோக்கியப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் சட்டத்தின் கீழான ஒன்ராறிரியோவின் உணவு வளாக ஒழுங்குமுறைக்கு (O.Reg 493/17) இணங்கி நடக்கவேண்டும்.